**கொழும்பு மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கொழும்பு மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

(அ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்படுகின்ற பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை.

| பந்தி இலக்கம் | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.2(இ)(i) | 124 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும் அதற்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,863,255,547 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாடுகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 1.2(ஈ)(i) | • 19 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 12,052,233 தொகையான கிடைக்க வேண்டிய 24 கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | • பல வருடங்களிலிருந்து தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சில்லறைக் காசு மற்றும் விசேட முற்பணக் கணக்குகளில் தீர்க்கப்படாத ரூபா 2,955,604 மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | • சபைக்கு பெறவேண்டியிருந்த கடன்பட்டோர் மீதியில் செயற்பாடற்ற 3615 கணக்குகளுக்குரிய ரூபா 412,426,061 பெறுமதி காணப்பட்டது. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | • 19 வருடங்கள் அளவிலான காலத்திற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற செலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 99,848,922 தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நியமத்தின் 18.3 ஆம் பந்தியின் பிரகாரம் நியமத்திற்கு இணங்க தயாரிக்கப்படுகின்ற ஆரம்ப நிதிக்கூற்றுக்கள் என சபையினால் தெளிவாகவும் மற்றும் வரையறைகள் இன்றிய நிதிக்கூற்றுக்களாக இருக்க வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் அவ்வாறான கூற்றொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாக குறிப்பிடுகின்றோம். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் வேண்டும். |
| (ii) | 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய மாநகர சபை நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளைகளில் உள்ளடக்கப்பட்ட 2155/6 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தின் 428 ஆம் பிரிவின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப் படுவதுடன் குறுகிய காலத்தில் பூர்த்தி செய்ததன் பின்னர் தொடர்ந்துவரும் நிதியாண்டில் அது தொடர்பான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம். | நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியளவில் ஒப்பந்தகாரர்களுக்காக மீள்கையளிப்பு கடிதம் மாத்திரம் விநியோகிக்கப்பட்ட ரூபா 492,292,297 தொகையான ஒப்பந்தப் பெறுமதிக்காக எந்தவொரு ஆற்றப்பட்ட வேலை அறிக்கை, முற்பணக் கொடுப்பனவு அல்லது ஒப்பந்தகாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் ஒன்று இன்றி பிழையாக மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினமாகவும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறுங்கால கடன்கொடுத்தோருக்காகவும் நிகழத்தக்க ஒதுக்கீடாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்தத்திற்காக கடன் ஏற்பாடு ஒதுக்குதல் உள்ளபடியான வேலை பூர்த்தி செய்யப்பட்ட சதவீதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவ துடன் அந்த ஒப்பந்தங்களின் வேலைகளில் பூர்த்தி செய்யப்பட்ட அளவு ஆண்டின் ஆரம்பத்தில் அதாவது பூர்த்தி செய்யப்படாத வேலையாக நிதி நிலைமை கூற்றில் சீராக்கப்படுகின்றது. | கடன் கொடுத்தோராக இனங்காணப் பட்டதன் பின்னர் மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 51 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி அதற்குரிய அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதியை விட ரூபா 810,274,585 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 38 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி அதற்குரிய அறிக்கைகளின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதியை விட ரூபா 8,637,902 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செலவின பேரேடு மற்றும் ஏனைய பட்டோலைகளை சரியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,346,459,923 ஆக இருந்ததுடன் அதற்குரிய நேரொத்த முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 771,876,261 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலையான வங்கி மேலதிகப்பற்று தொடர்ச்சியாக உயர்வடைந்து சென்றதன் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி மேலதிகப்பற்று ரூபா 2,054,730,082 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் வங்கி மேலதிகப்பற்று வட்டி ரூபா 111,426,197 ஆக காணப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் விரைவாக குறைவடைந்து செலவினங்களில் அதிகரிப்பு ஏற்பட்டமை இந்த நிலைமைக்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்த மையை சுட்டிக் காட்டுகின்றோம். | வருமானம் மற்றும் செலவினங்களை சரியாக கட்டுப்படுத்துவதன் மூலம் முறையான நிதிக் கட்டுப்பாட்டை பேணிச் செல்ல வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதன வரி | | |
| | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ஆதனவரி அளவு ரூபா 3,927,748,364 ஆகும். அந்த மொத்த நிலுவை ஆதனவரி மீதியில் ரூபா ஐந்து இலட்சத்தை விஞ்சிய 990 ஆதனங்கள் காணப்பட்டதுடன் அந்த நிலுவை ஆதனவரியின் அளவு ரூபா 1,733,724,967 ஆகும். அவ்வாறே இந்த நிலுவை ஆதனங்களுக்கிடையே 179 ஆதனங்கள் அரசாங்கத்தின் ஆதனங்களாக இருந்ததுடன் அதன் நிலுவை ரூபா 500,358,629 ஆகும். இந்த ஆதனங்களுக்கிடையே 687 ஆதன அலகுகள் 2020 ஆம் ஆண்டில் எந்தவொரு நிலுவை பணத்தையும் செலுத்தியிருக்கவில்லை. ரூபா 10 மில்லியனை விஞ்சிய நிலுவை ஆதனவரி ஆதனங்களின் எண்ணிக்கை 24 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 444,439,653 ஆகும். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நடைபாதை கடை வாடகை | | |
| | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நடைபாதை கடை வருமானம் ரூபா 552,022,106 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி ஆண்டின் சிட்டையிடலில் 524 சதவீதமாகும். இந்த நிலுவை வருமானத்தில் ரூபா 119,851,013 தொகையான செயற்பாடற்ற நடைபாதை கடை வாடகையும் உள்ளடங்கியிருந்ததுடன் இந்த அளவினை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ரூபா 50,957,617 தொகையான நிலுவ கடை வாடகையை பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் மிகுதி நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயற்பாடற்ற நடைபாதை கடை வாடகையை முறையானதாக பதிவழிப்பதற்கும் விரைவாக நிலுவை வாடகை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2014 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை மோட்டார் வாகன கட்டணங்களை அறவிடுவதற்காக கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களிலிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 92 ஒப்பந்தகாரர் களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகைப் பணம் ரூபா 135,373,482 ஆக இருந்ததுடன் அறவிடுவதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான கொழும்பு 08 இல் எல்விட்டிகல மாவத்தையில் மயான நிலத்தின் கட்டுப்பாட்டாளரின் உத்தயோகபூர்வ இல்லத்திற்கு உரித்தான 40 பேர்ச் அளவான காணியில் 11 பேர்ச் அளவான காணியில் 6000 சதுரஅடியுடைய இரண்டு மாடிக் கட்டிடம் அனுமதியற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டிடத்தில் நகர சபை ஊழியரினால் வியாபாரமொன்று நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இந்த ஆதனத்தை விரைவாக சபைக்கு மீளக் கையேற்பதற்கும், சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை கணிப்பிட்டு அறவிடுவதற்கும், முறையற்ற வகையில் செயற்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக விரைவாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தெரிவு செய்யப்பட்ட சபை அதிகார பிரதேசமொன்றில் பாக்கறின் மீற்றர் பொருத்துவதன் மூலம் மோட்டார் வாகனங்களை தரித்து வைப்பதற்காக | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கம்பனியிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 101,161,649 ஆகும். | | |
| (இ) | 19 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,187,033 தொகையான பெறவேண்டிய மீதிகளில் 07 விடயங்கள் மற்றும் 17 வருடங்களாக தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கையிலுள்ள காசு மீதி ரூபா 3,175,539 தொகை என்பன மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் உத்தியோகத்தர் களின் கையிலுள்ள காசை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஊழியர் கடன் மீதியில் 867 ஊழியர்களுக்குரிய ரூபா 12,127,529 தொகையான செயற்பாடற்ற கடன் மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடுவதற்கோ அல்லது அறவிடப்படாத மீதியை முறையானதாக புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 19 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 104,956,346 தொகையான மீள செலுத்த வேண்டிய வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது தீர்த்து வைப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 20 மெகசின் வீதி பொறள்ளையில் அமைந்துள்ள 17.7 பேர்ச் காணி 1983 செப்தெம்பர் 13 ஆந் திகதி ஒரு வருட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை 1984 செப்தெம்பர் 12 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் புதிய உடன்படிக்கையில் | ஆதனங்களை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டரீதியற்ற உடன்படிக்கைகளை இரத்துச் செய்தல், அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுதல், சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் சபைக்கு ஏற்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டிய நிலுவை வாடகைப் பணம் ரூபா 1,025,871 ஆகும். இந்த நிலத்தில் அனுமதியற்ற கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு பல்வேறு வியாபார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றதுடன் அதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நட்டத்தை அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 32 முதலிகே மாவத்தை கொழும்பு 01 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள சதுர மீற்றர் 2143.75 (B+G+6) ஆன 07 மாடிகளையுடைய கட்டிடத்தை பரிசோதிக்கும் போது கட்டிடத்தின் தரைமாடி நில மட்டத்தில் காணப்பட வேண்டிய போதிலும் நிலத்தினை விட 380 மில்லிமீற்றர் உயரத்தில் தரை மாடி நிர்மாணிக்கப்பட்டமை, சுற்றுவட்ட மேவுகை (Arcade Line) 40.61 சதுரமீற்றர் அனுமதியற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்டமை, வாகனங்களை தரித்து வைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட பகுதி களஞ்சியமாக பயன்படுத்தப்பட்டமை மற்றும் மேல்பக்கத்தை மேவுகை செய்யும் வகையில் 05 மாடிகளையுடைய 533.46 சதுரமீற்றருடைய அனுமதியற்ற கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வீடமைப்புத் தொகுதிகளிலிருந்து வாடகை அறவிடுதல் மிகவும் குறைந்த பெறுமதியை கொண்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையை அறவிடும் சதவீதம் 7 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. நிலுவை வீட்டு வாடகை தொடர்ச்சியாக உயர்வடைந்து சென்றமை அவதானிக்கப்பட்ட | விரைவாக நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு எதிர்பார்க்கின்றோம். | விரைவாக நிலுவை வீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

துடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 10,544,133 தொகையான நிலுவை வீட்டு வாடகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 18,081,706 வரை அதிகரித்திருந்தது.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சீ.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா மாவத்தை கொழும்பு 07 இல் அமைந்துள்ள இலக்கங்கள் 15, 17, 19, 25, 29, 35 என்ற காணிக்கூறுகளை ஒன்றிணைப்பதற்குரிய 2016 செப்தெம்பர் 05 ஆந் திகதி சட்டப்பிரிவின் அறிக்கையின் பிரகாரம் ஒன்றிணைக்கப்பட வேண்டிய காணி பகுதிகளில் உள்ளடக்கப்பட்ட உள்ளக வீதிகளின் உரித்தை உறுதிப்படுத்தாமையினால் அந்த பகுதிகளை ஒன்றிணைக்க முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், நகர ஆணையாளரினால் காணி கூறுகள் மற்றும் உட்பகுதியில் உள்ளக வீதிகளை ஒன்றிணைத்தல் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2016 செப்தெம்பர் 07 ஆந் திகதி பணிப்பாளர் (நகர திட்டமிடல்) இனால் நகர ஆணையாளரின் குறிப்பின் பிரகாரம் காணியை ஒன்றிணைப்பதற்குரிய இலக்கம் 016016 என்ற 2016 சனவரி 08 ஆந் திகதிய நிலவரைபட இலக்கம் ME/PBW/SD/06/2016 இன் கீழ் 2016 செப்தெம்பர் 22 ஆந் திகதி அங்கீகரித்து விநியோகிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | சட்டரீதியற்ற காணிக் கூறுகளை ஒன்றிணைத்தல் தொடர்பாக மீண்டும் பரீட்சித்து பிழைகளை சரிசெய்வதற்கும் அதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 9/1 பெல்கொபே பிரதேசம், கொழும்பு 08 என்ற காணியை ஒன்றிணைத்தல் தொடர்பாக 2018 ஏப்ரல் 20 ஆந் திகதிய சட்டப்பிரிவின் அறிக்கையின் மூலம் | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | சட்டரீதியற்ற காணிக் கூறுகளை ஒன்றிணைத்தல் தொடர்பாக மீண்டும் பரீட்சித்து பிழைகளை சரிசெய்வதற்கும் |

| | | |
|---|---|---|
| உட்பகுதியில் உள்ள வீதிகளின் உரித்தை உறுதிப்படுத்தாமையினால் காணிகளை ஒன்றிணைக்க முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்ட போதும், நகர ஆணையாளரினால் இலக்கம் 10492 என்ற 2012 திசெம்பர் 17 ஆந் திகதிய கூறுகளை ஒன்றிணைக்கும் நிலவரைபடம் 2018 செப்தெம்பர் 15 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | | அதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) இலக்கம் 91 மிலாகிரிய அவனியூ, கொழும்பு 05 என்ற காணிக்காக திட்டமிடப்பட்ட பிரகாரம் இயந்திர மோட்டார் வாகனங்களை தரித்து வைக்கும் முறைமையொன்று தாபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் 2019 பெப்ரவரி 21 ஆந் திகதிய தரச்சான்றிதழ்களுக்காக விண்ணப்ப பத்திரம் திட்டமிடல் குழுவினால் அங்கீகரிக்கப்படாதிருந்த போதிலும் நகர ஆணையாளரினால் 2019 ஏப்ரல் 04 ஆந் திகதி தரச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்தது. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | விநியோகிக்கப் பட்டுள்ள இணக்கச் சான்றிதழ்களின் சரியான தன்மை தொடர்பாக மீண்டும் பரீட்சித்து பிழைகளை சரிசெய்வதற்கும் அந்த பிழைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர் களுக்கு எதிராக நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். |

**3.4 செயற்திட்டம், இலக்குகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ரூபா 147,182,795 தொகையான 03 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கால எல்லை மற்றும் தினங்கள் நீக்கப்பட்ட காலஎல்லையையும் விஞ்சி 2021 மார்ச் 01 ஆந் திகதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்டது. இந்த 03 செயற்திட்டங்களுக்காக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செய்யப்பட்டுள்ள செலவினம் ரூபா 67,863,340 ஆகும். | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | விரைவாக செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கெப்பல் பூங்காவின் மத்திய பராமரிப்பு பிரிவிற்கு டிப்போ கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 37,305,576 பெறுமதியில் ஒப்பந்தகாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 2019 பெப்ரவரி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் 2021 பெப்ரவரி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 2,275,640 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. முற்பணம் ரூபா 6,670,832 தொகை செலுத்தப்பட்டிருந்த துடன் அதில் ரூபா 1,870,665 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தாமதக் கட்டணங்கள் மற்றும் முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதக் கட்டணம் மற்றும் முற்பணங்களை விரைவாக அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) | கொழும்பு பொது நூலகத்தின் பிரதான கட்டிடம் மற்றும் சிற்றுண்டிச்சாலையை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 75,762,695 தொகையான குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு 2018 திசெம்பர் மாதம் தொழில்நுட்பக் குழு பரிந்துரை செய்திருந்தது. பணிப்பாளர் (செயற்திட்டம்) இனால் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் தொடர்பாக பிழையான அறிக்கையொன்று 2019 மார்ச் 11 ஆந் திகதி நிதி நிலையியல் குழுவிற்கு சமர்ப்பித்தமையினால் 2019 மார்ச் 28 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபையினால் ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 செப்தெம்பர் 29 ஆந் திகதி பொதுச் சபையினால் இந்த ஒப்பந்தம் மீண்டும் முன்னைய ஒப்பந்தகாரருக்கு ரூபா 82,053,741 பெறுமதியில் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உத்தியோகத்தர்களின் கவனமின்மையின் காரணமாக சபைக்கு ரூபா 6,291,046 நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2021 மார்ச் 23 ஆந் திகதி 23 நாட்கள் தாமதத்தின் பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட நெருக்கடி நிலைமையினால் குறித்த திகதியில் மேற்கொள்ள முடியாதிருந்ததை தயவுடன் அறியத் தருகின்றோம். | குறித்த கால எல்லையில் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதாவது மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம், அமுல்படுத்தும் கால அட்டவணை, அந்த செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி / விளைவுகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு வருமானம், செலவினத் தலைப்பின் கீழ் வருமானங்களை சேகரித்தல் மற்றும் செலவினம் தொடர்பான திட்டம் மற்றும் அவற்றின் செயலாற்றல் குறிகாட்டிகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை. செயலாற்றலின் விளைவின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையான செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்தல் வேண்டும். |

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்காக 23 உள்ளக கணக்காய்வு ஐயவினாக்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதும் 2021 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் 04 கணக்காய்வு ஐயவினாக்களின் பரிந்துரை மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வின் நோக்கங்களை நிறைவேற்றும் முறையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.4 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (1) | 2003 முதல் 2016 ஆம் ஆண்டு வரை இனங்காணப்பட்டிருந்த ரூபா 214,628,001 நிலுவை ஆதனவரி செலுத்துவதற்கு இருந்த 193 ஆதனங்கள் அந்த ஆதனங்களின் உரிமையாளர்கள் தொடர்பாகவும் இறுதி தடவையாக உரிமை கோரப்பட்டிருந்த உரித்துறுதி மற்றும் நில வரைபடங்களை கண்டறிய முடியாமையின் அடிப்படையிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 259 ஆம் பிரிவின் பிரகாரம் விற்பனை சான்றிதழ் எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏலமிடப்பட்டு இதுவரை உரித்துறுதி மூலம் சபைக்கு கையளிக்கப்படாதிருந்த ஆதனங்களின் நிலுவைப் பணத்தை செலுத்துவதற்காக ஆதன உரிமையாளர்கள் கோரிக்கை சமர்ப்பித்தமையால் நகர ஆணையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த ஆதனங்களிலிருந்து நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (2) | 45 ஆம் இலக்க மார்க்கஸ் பெர்ணாந்து மாவத்தையில் அமைந்துள்ள டெனிஸ் விளையாட்டு மைதானத்தின் வாடகை உடன்படிக்கை 1983 செப்தெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் அத்திகதியிலிருந்து 1985 மே 31 ஆந் திகதி வரை 20 மாத காலத்திற்காக கணிப்பிடப்பட்ட சிக்கன வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 1958 இல் உடன்படிக்கை செய்யப்பட்ட மாதாந்த வாடகையான ரூபா 100 இனை | எதிர்வரும் 30 வருட காலத்திற்காக வாடகைக்கு வழங்குவதற்கு வரைவு முன்மொழிவொன்று பொதுச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு சகல நிலுவைப் பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையில் கைச்சாத்திடு வதற்கும் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே டெனிஸ் விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு எடுத்த விளையாட்டு சங்கத்தினால் 1958 ஆம் ஆண்டு முதல் விளையாட்டு மைதானத்திற்கு அடுத்தால் உள்ள நகர சபைக்குச் சொந்தமான 55 பேர்ச் நிலப் பகுதியும் சட்டரீதியற்ற வகையில் பயன்படுத்தப்படுவதுடன் இது தொடர்பாக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (3) | கிளிப்டன் மகளிர் மகா வித்தியாலயத்திற்கு பின் பக்கத்தில் அமைந்துள்ள மதில் மற்றும் அதற்கு அருகில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் தரை மாடி முதல் முதலாவது மாடி வரை நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் வித்தியாலயத்தின் எல்லை மதில் தொடர்புபடுத்தப்பட்டு 10’’ x 15’’ அளவில் தனியான மாடியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த அனுமதியற்ற நிர்மாணத்தை அகற்றுமாறு பல சந்தர்ப்பங்களின் போது பாடசாலை அதிகாரத் தரப்பினரால் கொழும்பு மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. மேல் மாகாண பிரதம செயலகத்தின் பிரதான சட்ட உத்தியோகத்தர் 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இந்த அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நகர ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்ட போதும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்களுக்காக சட்டரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (4) | நகரத்திலுள்ள 100 வருடங்களை விட பழைய மரங்களின் கிளைகள் மற்றும் மரக்குற்றிகளின் நிலைமையினை அளவிடுவதற்கும் பரீட்சிப்பதற்கும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 7.4 மில்லியன் செலவில் காணி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மரங்களின் உட்கட்டமைப்பினை பரீட்சிக்கும் இயந்திரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 06 வருடங்கள் கடந்திருந்த போதும் பயன்படுத்தப்படாமல் விகாரமகாதேவி பூங்கா அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. | இயந்திரத்தின் மூலம் வழங்கப்படுகின்ற தரவுகளை பகுப்பாய்வு செய்யக்கூடிய உத்தியோகத்தரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் தரவுப் பகுப்பாய்விற்காக இயந்திரத்தை கொள்வனவு செய்த நிறுவனத்துடன் கலந்துரையாடல் நடாத்துதல். | விரைவாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (5) | மல்வத்த வீதி நடைபாதை வியாபார கட்டிடத் தொகுதிக்காக அலகொன்று ரூபா 29,325 வீதம் 200 கூறுகள் ரூபா 5,865,000 தொகையில் 2016 செப்தெம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த கூறுக் கடைகள் ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஈடுபடுத்தப்படாமல் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டு பாதுகாப்பற்ற வகையில் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டது. | கூறுகளை பெற்றுக் கொள்ளல் வியாபாரிகளினால் நிராகரிக்கப்பட்ட மையினால் ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஈடுபடுத்த முடியாதிருந்த போதும் அந்த கடைகள் ஏனைய பொது சந்தைத் தேவையின் அடிப்படையில் ஈடுபடுத்துவதற்காக முன்மொழியப் பட்டுள்ளது. | விரைவாக ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (6) | 2018 மார்ச் 16 ஆந் திகதி ரூபா 4,242,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட கெங்கரு ரைடர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு 02 மாதங்கள் அளவிலான காலத்தில் உடைந்தமையினால் அது 2018 ஆம் ஆண்டு முதல் அது பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இதன் உத்தரவாத கால எல்லையும் 2020 மார்ச் மாதம் முடிவடைந்திருந்ததுடன் நகர ஆணையாளரின் 2021 மே 08 ஆந் திகதிய MT/ADM/AQ/2021/02 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் | 2021.04.07 ஆந் திகதிய பொதுச் சபை தீர்மானத்தின் பிரகாரம் வழங்குனருக்கு எதிராக வழக்குத் தொடருவதற்கு தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்டத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குனர் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறில்லையாயின் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | | |
| (7) | சபைக்குச் சொந்தமான மோதரை Elie House காணியில் 50 பேர்ச் அளவு 1992 யூலை மாதம் நிறுவனமொன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காணியின் மிகுதி 60 பேர்ச் அளவு அனுமதியற்ற வகையில் அந்த நிறுவனத்தினால் தமது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அந்த அனுதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 20 பேர்ச் அளவிலான காணியை வழங்குவதற்கு சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. | அனுமதியற்ற கைப்பற்றல்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (8) | ஆதன வரி இலக்கம் 43, பான்ஸ் பிரதேசம், கருவாத் தோட்டத்தில் அமைந்துள்ள 154.43 பேர்ச் பரப்பளவுடைய ஆதனம் உரிமையாளரினால் ஒரு வருடத்திற்குள் ஆதனவரி செலுத்தாமையினால் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் இலக்கம் 263 ஆம் பிரிவின் பிரகாரம் 1974 ஒக்தோபர் 07 ஆந் திகதி கொழும்பு காணி பதிவு செய்யும் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் கொள்வனவு செய்யும் சான்றிதழ் பதிவு செய்யப்பட்டு ஆதனத்தின் சட்டரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கும் போது 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் காணியின் உரித்தை நகர சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தைப் பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு மாநகர சபையின் சட்டத் திணைக்களத்தினால் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் 63194/5/16 ஆம் இலக்கத்தின் கீழ் தொடரப்பட்டுள்ள வழக்கு 2021 செப்தெம்பர் 06 ஆந் திகதி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது | காணியின் உரித்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (9) | இடமாற்றலாகி வந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் 23 | திருமதி. ஜே.எம்.பி. ஜயவர்தன, மற்றும் திரு.வீ.கே.ஏ அநுர | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்கள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உத்தியோகபூர்வ இல்லத்தில் உரித்து கோரியிருந்தமையினால் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் தண்டப்பண வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2020 யூன் வரையிலும் இடமாற்றலாகி வந்த நகர ஆணையாளர் இருவரிடமிருந்து அறவிட வேண்டிய தண்டப்பண வாடகை ரூபா 27,100,751 ஆக கணிப்பிடப்பட்ட போதும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | அவர்களுக்குரிய தண்டப்பண வாடகை கணிப்பிடப்பட்டு அவர்களின் சேவை நிலையத்திலிருந்து அறவிடுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (10) | பொது நிதி உதவி திணைக்களத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லத்தில் முன்னாள் அறக்கொடை ஆணையாளர் ஒருவர் நீதிமன்ற கட்டளையின் மூலம் 2016 சனவரி 27 ஆந் திகதி வீட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் மேலும் அவரிடமிருந்து அறவிட வேண்டிய வீட்டு வாடகை ரூபா 292,790 அறவிடப்பட்டிருக்க வில்லை. | அறவிட வேண்டிய தண்டப்பண வாடகையுடன் மொத்த நிலுவைப் பணமான ரூபா 386,185 தொகை பணத்தை அறவிடுவதற்காக சட்டப்பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (11) | முன்னாள் பிரதான சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்னரும் உத்தியோகபூர்வ இல்லத்தை மீள சபைக்கு கையளிக்காமையால் தாபன விதிக்கோவையின் XIX அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்கு அறவிட வேண்டிய தண்டப்பண வாடகை ரூபா 8,019,751 தொகை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டியிருந்தமை 2019 நவம்பர் 30 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முன்னாள் பிரதான சுகாதார வைத்திய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 8,019,751 தொகையான தண்டப்பண வாடகையை அறவிடுவதற்காக சட்டப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (12) | நகர செயலாளர் திணைக்களத்திற்குரிய WP-KA 9959 என்ற வாகனம் 2017 செப்தெம்பர் 04 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவினால் 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் வாகன விபத்தினால் சபைக்கு ஏற்பட்டிருந்த ரூபா 262,924 நட்டம் வாகனம் நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரிடமிருந்தும், வாகனத்திற்கு பொறுப்பாக இருந்த சாரதியிடமிருந்தும் சமமான அளவில் அறவிட வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | சாரதி திரு.ஆர்.பீ.குணசேன அவர்கள் சகல குற்றங்களுக்கும் பிழையற்றவர் என தீர்மானிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்த துடன் நகர ஆணையாளரின் 2021.02.08 ஆந் திகதி நாலே/ஆர்டீ6 விமர்சன/2018(1)1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ரூபா 131,462 தொகையான நட்டம் முன்னாள் நகர செயலாளர் திருமதி.எச்.டீசீ. ஜானகியிடமிருந்து உரிய பணத்தை அறவிடுவதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்குமாறு கோரி அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு 2018.12.10 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | விரைவாக நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |